# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, அரச ஈட்டு, முதலீட்டு வங்கி (திருத்தச்) சட்டம்

---

*[1984, ஜூன் மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, ஜூன் மாதம் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : சதம் 60*

1984 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, அரச ஈட்டு, முதலீட்டு வங்கி (திருத்தச்) சட்டம்

[1984, ஜூன் மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 35/83
1597

1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு, முதலீட்டு வங்கிச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது, 1984 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, அரச ஈட்டு, முதலீட்டு வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) "ஐவரை" என்னுஞ் சொல்லுக்குப் பதிலாக "ஒன்பது பேரை" என்னுஞ் சொல்லை இடுவதன்மூலம் ; அத்துடன்

(ஆ) "அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆட்களில் ஒருவர்" என்பதிலிருந்து அப்பிரிவின் இறுதிவரை உள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலம் :—

"அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆட்களில் மூன்று பேர்—

(அ) விவசாயம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சு ;

(ஆ) வீடமைப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சு ; அத்துடன்

(இ) பண்ணை விலங்கு அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சு,

ஆகிய ஒவ்வொரு அமைச்சினதும் ஒவ்வொரு பிரதிநிதியாயிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளில், அவ்வுட்பந்திகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் "ஏதேனும் கமத்தொழில் அல்லது கைத்தொழில் நோக்கத்திற்கென", என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் வீடமைப்பு, கமத்தொழில் அல்லது கைத்தொழில் நோக்கத்திற்கென" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ), (ஈ) என்னும் பந்திகளில், அவ்வொவ்வொரு பந்தியிலும் முறையே காணப்படும் "கமத்தொழில் அல்லது கைத்தொழில்", "கமத்தொழிலில் அல்லது கைத்தொழிலில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே,

"வீடமைப்பு, கமத்தொழில், அல்லது கைத்தொழில்", "வீடமைப்பில், கமத்தொழிலில் அல்லது கைத்தொழிலில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்;

(இ) அவ்வுட்பிரிவின் (உ), (ஊ) என்னும் பந்திகளில், அவ்வொவ்வொரு பந்திகளிலும் காணப்படும் "கமத்தொழில் அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வீடமைப்பு, கமத்தொழில் அல்லது கைத்தொழில் பொறுப்புமுயற்சி" என்னும் சொற்களை இடுவதன்மூலம்;

(ஈ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் :—

"(எ) அரசாங்கத்தினால், மத்திய வங்கியினால் அல்லது அமைச்சரினால் அங்கீகரிக்கக்கூடியவாறான ஏனைய ஏதேனும் வங்கியினால் அல்லது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிகளை, பங்குகளை, தொகுதிக்கடன்களை, ஈடுகளை, முறிகளை அல்லது பிணைப்பொறுப்புக்களை வாங்குதல், விற்றல், முதலீடு செய்தல் அல்லது கொடுக்கல் வாங்கல் செய்தல்;";

(உ) அவ்வுட்பிரிவின் (ச) என்னும் பந்தியில் "தவணைப் பணவைப்புக்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தவணைப் பணவைப்புக்களை, சேமிப்பு பணவைப்புக்களை, ஒப்பந்த பணவைப்புக்களை, கடன் இணைந்த சேமிப்புப் பணவைப்புக்களை" என்னும் சொற்களை இடுவதன்மூலம்;

(ஊ) அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியில் "கமத்தொழிலில் அல்லது கைத்தொழிலில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வீடமைப்புத் தொழிலில், கமத்தொழிலில் அல்லது கைத்தொழிலில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்; அத்துடன்

(எ) அவ்வுட்பிரிவின் (அஅ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலம்—

"(ஆஆ) அமைச்சரால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் வங்கியினால் அல்லது வேறு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கடன்களுக்கு மீண்டும் நிதியளித்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இருபது கோடி ரூபாவாதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருநூறு கோடி ரூபாவாதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "சபையானது விற்பனைச் சான்றிதழொன்றில் ஒப்பமிடுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சபையின் சார்பில் சபையின் எவரேனும் இரு உறுப்பினர் விற்பனைச் சான்றிதழில் ஒப்பமிடுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "சபையினால் (1) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(1) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500 கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.